මගේ අංකය / எனது இல / My No: DMA/ADM/2010- 80 ඔබේ අංකය / உமது இல / Your No දිනය / திகதி / Date 2010.07.26

முகாமைத்துவ கணக்காய்வுச்சுற்றறிக்கை இலக்கம் DMA/2010(5)

சகல அமைச்சுக்களினதும் செயலாளர்களுக்கும் திணைக்களத்தலைவர்களுக்கும்

**வெளிநாட்டு உதவி அல்லது உள்நாட்டு நிதியத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் கருத்திட்டங்களில் உள்ளக கணக்காய்வுக்கான அறிவுரைகள்**

அரச வளங்களை வினைத்திரனாகவும் பயன் விளைவுள்ளதாகவும் மற்றும் சிக்கனமாகவும் பயன்படுத்தி, அபிவிருத்திக் கருத்திட்டங்களை உரிய காலத்தில் பயனுள்ளதாக பூர்த்தி செய்தல் பிரதான கணக்கீட்டு / கணக்கீட்டு உத்தியோகத்தர்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்புக்களை உரிய விதத்தில் நிறைவேற்றுவதற்காக உள்ளக கணக்காய்வு உதவியளிக்கக்கூடிய விதம் நி.ஒ.வி 133 (1) அ ii இல் கீழ் கண்டவாறு காண்பிக்கப்பட்டுள்ளது.
"திணைக்களத்திற்கு நியமிக்கப்பட்டுள்ள அல்லது திணைக்களத்தினால் பொறுப்பேற்கப்பட்ட அபிவிருத்திக் கருத்திட்டங்கள் மற்றும் திட்டமிடல் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் நிறைவேற்றப்படுவதில் கிடைக்கப் பெற்றுள்ள முன்னேற்றத்தை நிச்சயித்துக் கொள்வதற்கு கணக்கீட்டு உத்தியோகத்தர்களுக்கு மற்றும் முன்னேற்ற கண்காணிப்புக் குழுவுக்கு உதவியளித்தல்"
விசேடமாக வெளிநாட்டு உதவிப்பணம் வினைத்திறனாக பயன்படுத்தப்படாது இருப்பின் கருத்திட்டச் செலவினம் திரட்டிய நிதியத்திற்கு மேலதிக செலவின பாரம் ஒன்றாக அமையும். சிறந்த நிதி முகாமைத்துவம் ஒன்று மற்றும் விணைத்திரனான செயலாற்றுகையின் மூலம் இவ்வாறான நிலைமைகளை தவிர்த்துக் கொள்வதற்காக உள்ளக கணக்காய்வுக்கு பயனுள்ள வகையில் பங்களிப்புச் செய்யலாம். கருத்திட்டங்களின் உள்ளக கணக்காய்வின் போது விசேட கவனம் செலுத்தப்பட வேண்டிய விடயங்கள், கருத்திட்டங்கள் சம்பந்தமான முக்கியமான விடயங்கள் அடங்கிய ஆவனங்கள், சுற்றறிக்கை அறிவுறைகள் மற்றும் கருத்திட்டங்களின் உள்ளக கணக்காய்வுக்காக வளிகாட்டும் கேள்விக் கொத்தொன்று அறிமுகம் செய்தல் இந்த அறிவுறைக்கோவையின் குறிக்கோள் ஆகும். (உள்ளகக் கணக்காய்வு கேள்விக் கொளத்து இணைப்பு 1, 2 மற்றும் 3 ஆக இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.)

2. கருத்திட்ட உள்ளகக் கணக்காய்வின் போது கவனம் ஈர்க்கப்படவேண்டிய விடயங்கள்

1. கருத்திட்டம் , இணக்கம் தெரிவிக்கப்பட்ட வேலைத்திட்டத்தின் பிரகாரம் நடைமுறைப்படுத்தப்படுகின்றதா இல்லாவிடில் அதற்கு மாற்றமாக ஏதேனும் சிக்கலான நிலைமைகள் ஏற்பட்டுள்ளனவா.

2. கருத்திட்டத்திற்காக தேவையான பணிக்குழுவினர் மற்றும் ஏனைய வசதிகளின் போதுமான தன்மை

3. தொழிநுட்ப குறியீடுகளுக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படுகின்றனவா என்பதை உருதிப்படுத்திக் கொள்ளும் நிருவாக உபாய முறைகளின் போதுமான தன்மை.

4. ஆலோசகர்களின் கண்காணிப்பு அவர்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்புகளுக்கு அமைவாக நடைபெருகின்றனவா என உருதிப்படுத்துவதற்காக யன்படுத்தப்பட்டுள்ள நிருவாக உபாய முறைகள்

5. கருத்திட்ட பெறுகைகள் அரசாங்க மற்றும் உதவியளிக்கும் நிறுவனங்களின் பெறுகை வழிகாட்டல்களுக்கு அமைவாக செய்யப்படுகின்றனவா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளல்.

6. ஊதவியளிக்கும் நிறுவனத்துடன் இணக்கப்பாட்டுக்கு மற்றும் அறிவுறை தொடர்களுக்கு அமைவாக நிதியம் பயன்படுத்தப்படல் மற்றும் பகிர்ந்தளித்தல் நடைபெறுகின்றனவா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளல்.

7. சிவில் கட்டட நிருமானம் மற்றும் உபகரணங்கள், பொருட்கள் மற்றும் சேவைகள் ஆகியவற்றை தாபிக்கும் ஏற்றுக் கொள்ளப்பட்ட தரங்கள் மற்றும் ஒப்பந்த உடன்படிககைக்கு அமைவாக நடைபெற்றுள்ளனா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு பயன்படுத்தப்பட்டுள்ள நிருவாக உபாய முறைகளின் போதுமான தன்மையை உறுதிப்படுத்திக் கொள்ளல்.

8. நிதியம் பயன்படுத்தல் மற்றும் நிதிக் கட்டுப்பாட்டு அமைப்பின் போதுமான தன்மை உறுதிப்படுத்துவதற்கு பயன்படுத்தப்பட்டுள்ள வேலைத்திட்டம்.

9. இணங்கிய நிதி முகாமைத்துவ உடன்படிக்கையில் நிபந்தனைகள் மற்றும் ஏனைய உடன்படிக்கைகளுக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்பதை உறுதிப்படுத்தல்.

10. கருத்திட்டம் சம்பந்தமாக அரசாங்கத்தின் உறுதிப்படுத்துகை மற்றும் பொறுப்புக்கள் சாத்தியமாகின்றது என உறுதிப்படுத்தல்.

11. கருத்திட்டத்தின் பிரிவுகள் மற்றும் அளகுகள் இடையே நிதியம் மீண்டும் பகிர்ந்து அளிக்கப்படல் மற்றும் மேலதிக நிதித் தேவைகள் எழுகின்றனவா என்பது போன்ற விடயங்கள் சம்பந்தமான நிதி முகாமைத்துவத்தின் ஒழுங்குமுறை.

12. கருத்திட்டத்தின் விடயப் பரப்பு மாற்றமடைந்து மேலதிக வேலைகள் ஏற்படும் எனின் அது சம்பந்தமாக பின்பற்றப் படவேண்டிய நடமுறைகள்.

13. கருத்திட்ட கால எல்லை நீடிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமாயின் அதற்கான தேவைகளை உறுதிப்படுத்திக் கொள்ளல்.

14. கரூத்திட்டத்தை பூர்த்தி செய்யும் நடைமுறைகள், கரூத்திட்டங்கள் முடிவுருத்துவதை பேனுவதற்காக பயன்படுத்தப்பட்டுள்ள வழிமுறைகள், கரூத்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதென சான்றிதழ் வழங்குதல், காப்புறுதி மற்றும் அது சம்பந்தமான வேண்டுகோள்களை விடுவித்தல் மற்றும் சொத்துக்களை ஒப்படைத்தல் போன்ற கருத்திட்ட முடிவுறுத்தலுக்காக பயன்படுத்தப்பட்டுள்ள வேலைத்திட்டங்கள்.

3. கருத்திட்ட உள்ளகக் கணக்காய்வின் போது கவனம் செலுத்தப்பட வேணடிய ஆவணங்கள்.

### 3.1 கடன் உடன்படிக்கை ( loan Agreement )

தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் செய்யப்படும் மதிப்பீடொன்றின் பின்னர் அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் கருத்திட்டம் சம்பந்தமான வெளிநாட்டு உதவி வழங்கப்படும நிறுவனம் மற்றும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையே உடன்டிக்கைகள் செய்து கொள்வதுடன், கடன் உடன்படிக்கை அவற்றுள் ஒன்றாகும். கடன் பெற்றுக் கொள்ளும் மற்றும் கடன் வழங்குபவர் பொருள்கோடல், கடன் பணத் தொகை மற்றும் கருத்திட்டத்தின் பெயர், கடன் வழங்குபவர் மற்றும் கடன் பெறுபவர் இடையே உள்ள இணைப்பு, உடன்படிக்கை மற்றும் சான்றுப்படுத்தல், கருத்திட்டத்தின் குறிக்கோள்கள், கடன் ஆக்கக் கூறுகள், வகைப்படுத்தல்கள் மற்றும் விடயங்கள், நிதியிடல் திட்டம்,கடன் நிதியப் பாவனை மற்றும் பகிர்ந்தளிப்பு ஒழுங்கு விதிகள், கடன் நிதியத்தை தயார்படுத்தல் மற்றும் கடன் வழங்குனரினால் வழங்கப்படும் வசதிகளின் எல்லைகள், கடன் செயல்வலுபபெறல் மற்றுமு் கருத்திட்த்தின் கால எல்லை, அதிகாரப் பகிர்வு, கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தல், கடன் நிதியம் விடுவிக்கப்பட்ல், கடன் தொகை மீளச்செலுத்தும் ஆவணம், பெறுகை நடைமுறைகள், துணை நிதியிடல் உடன்படிக்கை தேவைப்படின் அவை மற்றும் கடன் தொகைகை மூடிவிடல் ஆகிய விடயங்கள் இந்த உடன்படிக்கையில் உட்சேர்க்கப்படும்.

### 3.2 மானிய உடன்படிக்கை (Grant Agreement)

கருத்திட்டத்திற்கென மானியமாக வெளிநாட்டு உதவி கிடைக்குமிடத்து மானியம் வழங்கப்படும் வெளிநாட்டு நிறுவுனம் மற்றும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையே உடனப்டிக்கையொன்று கைச்சாத்திடப்படும். மானியம் வழங்கும் நிறவனத்தின் பெயர், ஒருங்கிணைப்பு முகவர், உதவி பெறுபவர் மற்றும் கருத்திட்டம் நடைமுறைப்படுத்துபவர்களுடையதாயின், மானியத்தின் பெறுமதி, கருத்திட்தின் விடயப் பரப்பு, மற்றும் வழங்குனர் மற்றும் பெறுனரின் பங்களிப்பு, மற்றும் பொறுப்புகள், பெறுகை நடைமுறைகள், அறிக்கையிடல் தேவைப்பாடு, கருத்திட்டப் பெறுகை மதிப்பீடு, சிக்கல்களைத் தீர்த்துவைத்தல், கருத்திட்ட அறிக்கை சமர்ப்பித்தல், மற்றும் உரித்துடைய மாதிரி, நிதித் தட்டம் ஆகிய விடயங்கள் இந்த உடன்படிக்கையில் உட்சேர்க்கப்படும்.

### 3.3 துணை நிதியிடல் உடன்படிக்கைகள் (Subsidiary Financing Agreement)

ஏதேனும் கருத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதன் பொருட்டு கூட்டுத்தாபனம் அல்லது தொழில் முயற்சிகளுக்கு வெளிநாட்டு உதவிகள் பெறறுக் கொடுக்கப்படும் சந்தாப்பங்களில் அரசாங்கம் அந்த நிறுவனத்துடன் கீழ்க்காணும் ஏற்பாடுகள் அடங்கியதாக துணை நிதியிடல் உடன்படிக்கையொன்று செய்து கொள்ளும். கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் நிறுவனத்திற்கு அரசாங்கம் பெற்றக் கொள்ளும் கடன் மீது மீண்டும் கடன் கொடுப்பனவு செய்யப்படும். அரசாங்கத்தினால் அந்தக் கடன் பெறும் நிறுவுனத்தின் பெயரில் கடன் கணக்கொன்று திறக்கப்படும். இந்த உடன்படிக்கையின் பிரகாரம் கடன் பெற்றுக் கொள்ளும் நிறுவனத்தினால் கடன் பணத்தின் விடுவிக்கப்படவேண்டிய மீதி சார்பாக உடன்படிக்கையின் பிரகாரம் நிச்சயிக்கப்படும் வட்டியொன்று தியைடீசரி செயற்பாடுகளட திணைக்களத்திகுச் செலுத்துதல் வேண்டும். பிரதான கடன் பணத் தொகை சலுகைக் காலமொன்று வழங்கப்பட்டிருப்பின் அதன் பின்னா் உடன்படிக்கையின் பிரகாரம் வரும் திகதிகளில் அரசாங்கத்திற்கு மீளச் செலுத்தப்பட வேண்டும். வட்டி மற்றம் மூலதனம் செலுத்துதல் தாமதமாகுமெனில் அதற்கான தாமதக் கட்டணமொன்றும் உடன்படிக்கையின் பிரகாரம் செலுத்துதல் வேண்டும். இதற்கு மேலதிகமாக இந்த உடன்படிக்கையின் மூல நிபந்தனைகள், கருத்திட்டம் நடைமுறைப்படுத்தும் தரங்கள், உடன்படிக்கை ஆரம்பமாகும் திகதி மற்றும் முடிவுறும் திகதி ஆகிய முக்கியமான விடயங்களும் உட்சேர்க்கப்படும். துணை நிதியிடல் உடன்படிக்கையின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் கருத்திட்டங்கள் உள்ளக கணக்காய்வுக்காக அந்த உடன்படிக்கை சம்பந்தமான அறிவு முக்கியமானதாகும்.

### 3.4 வெளிநாட்டு உதவி வழங்கும் நிறுவனத்தினால் வெளியிடப்படும் வழிகாட்டல்கள் மறறம் கைந்நூல்கள் (Guidelines and Manuals)

வெளிநாட்டு உதவி வழங்கும் நிறுவனங்களினால் வெளியிடப்படும் வழிகாட்டல்களில் ஒவ்வொரு நிறுவனத்தின் வெளிநாட்டு உதவி வழங்குதல் தொடர்பான கொள்கைகள், அறிவுரைகள், பாவனைகள் மற்றும் நடைமுறைகள் பற்றி வெளியடப்படுவதுடன் வெளிநாட்டு உதவிக் காசுப்பாய்ச்சல் செய்யப்படும் விதம், கடன் தொகை விடுவிக்கப்படும் போது பின்பற்றப்படும் வழிமுறைகள், கருத்திட்டப் பணிக்குழுவினரின் வினைத் திறன் மற்றும் சிறந்நத உள்ளக நிருவாகம் ஆகிய வினைத்திறன் கொண்ட கருத்திட்ட முகாமைத்துவத்திற்கு முக்கியமான விடயங்கள் அடங்குகின்றன. மேலும் நிதியம் விடுவித்துக் கொள்வதன் பொருட்டு விண்ணப்பிகைும் போது உதவியளிக்கும் சகல ஆவணங்களும் சமா்ப்பிக்கப்படுதற்குப் பதிலாக SOE (statament of expenditure) Procedure, Force Acont Procedure, மற்றும் SAW(simultaneous application for subloan and withdrawal) Procedure ஆகிய இலகுவாக்கும் முறைகள் மற்றும் அதற்குத தேவையான ஆவணங்கள் பூர்த்தி செய்யும் நடைமுறைகள் மற்றும் அதற்காக இருக்க வேண்டிய சிறந்த கருத்திட்ட முகாமைத்துவம் போன்ற பல பொது விடயங்கள் அந்த வழிகாட்டலகளில் உட்சேர்க்கப்படடுள்ளதனால் உள்ளகக் கணக்காய்வின் போது கருத்திட்டத்திற்குரிய கடன் வழங்கும் நிறுவனத்தினால் வெியிடப்பட்ட வழிகாட்டல்கள் பற்றிய அறிவு முக்கியமானதாகும்.

### 3.5 கருத்திட்டப் பெறுகை (Project Procuement)

கருத்திட்டப் பெறுகை நடைமுறைகளின் செயற்திறன் கருத்திட்டமொன்றின் செயலாற்றகைக்கு பெரிதும் பங்களிக்கின்றது. அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டி நெறிகள் 2006 மற்றும் பெறுகை விடயக் கோவை அரசாங்கத்தின் கேள்வி விதி முறைகள் சம்பந்தமான சகல சுற்றறிக்கை ஏற்பாடுகளையும் விஞசியதாக செயற்படும். வெளிநாட்டு உதவி வழங்கும் நிறுவனங்களுடன் பேசசுவாா்த்தை நடாத்தி மேற்கூறப்பட்ட பெறுகை வழிகாட்டு நெறிகள் தயாரிக்கப்பட்டுள்ளதனால்,

நிதி மூங்கும் மூலங்கள் கவனத்திற் கொள்ளப்படாமல் இந்த வழிகாட்டு நெறிகள் சகல பெறுகைகளுக்கும் தாக்கம் செலத்தம் என அதன் 1.3.2 ஆம் பிரிவில் காண்பிக்கபட்டடுள்ளது. மேலும் 1.3.3 ஆம் பிரிவுக்கு அமைவாக நிதி வழங்கும் நிறுவனத்தினாலேயே வெளியிடப்பட்டுள்ள பெறுகை வழிகாட்டு நெிகளைப் பின்பற்ற வேண்டும் என அந்த நிறுவனத்தினால் விதிக்கப்படுமாயின் இலங்கை அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டு நெறிகளின் ஏற்பாடுகளுடன் மோதல்கள் ஏற்படின கடன் வழங்கும் நிறுவனத்தின் பெறுகை வழிகாட்டு நெறஜகளைப் பின்பற்ற வேண்டும் எனவும் காண்பிக்கப்பட்டுள்ளது. மேலும் வெளிநாட்டு நிதி வழங்கப்படும் கருத்திட்டமொன்றில் நிதி வழங்கும் நிறுவனத்தின் இணக்கப்பாட்டுடன் வெளிநாட்டு ஒப்பந்தக்காரர்களுக்கு உள்நாட்டு ஒப்பந்நதக்காரர்களுடன் சமமான நிபந்தனைகளின் கீழ் போட்டியிடுவதற்கு சந்தர்ப்பம் வழங்குதல், உள்நாட்டு அரசாங்க நிறுவனங்கள் அல்லது அங்கீகரிக்கப்ட்ட சபைகள், கம்பனிகளுக்கு விசேட சலுகை வழங்கப்படாதிருத்தல் மற்றம; ICTAD நிறவனத்தின் பதிவை கவனத்திற் கொள்ளல் போன்ற விடயங்கள் பூர்த்தி செய்யப்படுமாயின் தேசிய ரீதியில் போட்டித் தன்மையான கேளவி கோரப்பட முடியும் எனவும் பெறுகை வழிகாட்டு நெறிகளின 3.2.3 ஆம் பிரிவில் வலியுறுத்தப்ட்டுள்ளது. இந்த விசேடமான விடயங்களுக்கு உட்பட்டதாக பெறுகை வழிகாட்டு நெறிகள் கருத்திட்ட பெறுகை சம்பந்தமாக அமுலாகும் முன்னுரிமை ஏற்பாடாகும் என்பதனால் அது பற்றிய அறிவும் உள்ளக கணக்காய்வின் போது முக்கியமானதாகும்.

**3.6 கருத்திட்ட பணிக்குழுவினர் முகாமைத்துவம். (Project Staff Management)**

கருத்திட்டப் பணிக்குழுவினரின் முகாமைத்துவம் சம்பந்தமாக கீழ்க் காணும் நிபந்தனைகளுக்கு அமைவாக 2007.04.05 ஆம் திகதியுடைய 33 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை மற்றும் 2007.12.30 ஆம் திகதியுடைய 33.1 ஆம் இலக்க திருத்தம் செய்யப்பட்ட முகமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை அமைவுடையதாகும்.

இந்தச் சுற்றறிக்கைகளை உரித்துடையதாக்கிக் கொள்வதற்கெனின்,

I. தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் மதிப்பீடு செய்யப்பட்டு அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு ளங்கள் மற்றம் முகாமைத்துவ சேவை ஆகிய திணைக்களங்களின் இணக்கப்பாட்டுடன் நிதியம் வழங்குதல், வரவு செலவுத் திட்ட ஒதுககீடுகள் ஏற்பாடு செய்தல் மற்றும் பதவிகள் அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்டமாக இருத்தல் வேண்டும்.

II. கருத்திட்டக் கால எல்லை 2 வருடததிற்கக் கூடுதலாக இருத்தல வேண்டும்.

III. கருத்திட்டம் வெளிநாட்டு உதவி மூல் நடைமுறைப் படுத்தப்படுவதாயின்,

(அ) வெளிநாட்டு உதவித் தொகை கருத்திட்ட செலவினத்தின் 50% ஐ விடக் கூடுதலாக இருத்தல் வேண்டும்.

(ஆ) வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் ஊடாக இலங்கை அரசாங்கத்துடன் கடன வழங்கும் நிறுவனத்தினால் உடன்படிககையொன்று செய்து கொள்ளல் வேண்டும் என்பதுடன் உடன்படிக்கையில் கருத்திட்டத்திற்கு அடையாளமாக பெயரொன்று வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(இ) கருத்திட்டத்தன் மொத்தச் செலவினம் 5.0 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொர்களுக்குக் குறைவாக இருத்தலாகாது.

IV. கருத்திட்டம் உள்நாட்டு நிதியத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப் படுவதாயின் 5.0 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொர்களுக்குக் கூடுதலான உள்நாட்டு நிதியத்தின் மூலம் நடைமுறைப் படுத்தப் படும் கருத்திட்டமொன்றாக இருத்தல் வேண்டும்.

கருத்திட்டத்திற்குத் தேவையான பணிக்குழுவினரை இனங்காணல், முன்னுரிமைப் பணிக்குழுவினரை ஆட்சேர்ப்புச் செய்தல், அரசாங்க சேவையில், மாகாண அரசாங்க சேவையில் மற்றம் கூட்டுத்தாபனச் சேவையில் உள்ள உத்தியோகத்தர்களை கருத்திட்டப் பணிக்குழுவிற்கு ஆட்சேர்ப்புச் செய்தல், சம்பங்கள் மற்றும் ஏனைய வசதிகளைத் தீர்மானித்தல், வெளியிலிருந்து ஆட்சேர்ப்புச் செய்யப்படும் உத்தியோகத்தர்களுக்கு சம்பங்கள் மற்றும் ஏனைய வசதிகளைத் தீர்மானித்தல், 2006ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் XV அத்தியாயத்தன் 32 ஆம் பந்திக்கு அமைவாக வர செலுத்துதல், கருதிட்ட பணிக்குழுவினரின் ஏனைய வசதகள், லீவு, ஒழுக்காற்ற நிருவாகம், நட்டத்தை தீர்வு செய்தல், இயக்கல் நடவடிக்கைகளை துரிதப் படுத்துவதன் பொருட்டு ஊக்குவிப்புக்

கொடுப்பனவு செலுத்துதல், ோேன்ற விடயங்கள் இச்சுற்றறிக்கையினால் அளாவப்படுகின்றன.
இச்சுற்றறிக்கையினால் அளாவப்படாத கருத்திட்டங்கள் மற்றம் பணிக்குழுவினா் முகாமைத்துவம் பற்றிய விடயங்கள் சம்பந்தமாக தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகள் அமைவுடையதாக இருக்கும்.

**4. கருத்திட்ட உள்ளக கடடுப்பாட்டுச் சட்டகத்தை தீர்மானித்தல் மீது முக்கியமாகும் நிதி ஒழுங்கு விதிகள் மற்றும் முன்னோடிச் சுற்றறிக்கைள்.**

01. 1992 நிதி ஒழுங்கு விதிக் கோவையின் 3 ஆம் பிரிவில் புதிய பிரேரனைகள் சம்பந்தமான 34, 35 மற்றும் 36 ஆம் நிதி ஒழுங்கு விதிகள்.
உள்ளக கணக்காய்வு சம்பந்தமான நிதி ஒழுங்கு விதி 133 மற்றும் 134.
நிதி நிருவாகம் சம்பந்தமான விடயத்தை ஒப்படைத்தல் நி.ஒ.வி. 135, 136, 137, 138.
வெளிநாட்டு உதவி சம்பந்தமான அத்தியாயம் - நி.ஒ.வி. 610 தொடக்கம் 626 வரை.

02. "வெளிநாட்டு உதவி கணக்கீடு செய்தல்" சம்பந்தமாக 1994.04.20 ஆம் திகதிய 30/94 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை.

03. " Withdrawals From Special Currency Accounts in the Central Bank of Sri Lanka"
State Accounts Circular No – 165/203 dated 17th Nov. 2003.

04. "Guidelines & Procedures and Monitoring Systems on the use of Asian Development Bank's Imprest fund Procedure" State Accounts Circular No: 2002/149 – dated 27th June 2002.

05. "Recruitment Remuneration and management of project staff" Management Services Circular No.- 33 dated 05th April 2007 and 33 1 dated 20th December 2007.

06. " பெறுகை வழிகாட்டு நெறிகள் 2006" தே.பெ.க. சுற்றறிக்கை இல: 08, 2006 ஜனவரி 25 மற்றம் பெறுகை விடயக் கோவை 2006 தே.பெ.வி. சுற்றறிறக்கை இல: 09 பீ – 2006 மார்ச் 01.
மேற்கூறப்பட்ட நிதி ஒழுங்கு விதிக் மற்றும் சுற்றறிகை ஏற்டுகளை அடிப்படையாகக் கொண்டு கருதிட் உள்ளக கணக்காய்வுக்கான கேவிக் கொத்து தயாரிக்கப்ட்டுள்ளது.

5. வருடாந்த உள்ளகக கணக்காய்வுத் திட்டதிற்கு அமைச்சு / திணைக்களத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் கருத்திட்டங்களும் உட்சேர்க்கபடக் கூடியதாக இருக்கும் என்பதுடன், இயன்ற ரை இந்த வழிகாட்டல்களைப் பயன்படுத்தி உளளகக் கணக்காய்வுத் திட்டங்களைத் தயாரித்து அதன் பிரகாரம் கருத்திட்ட காலத்தின் போதே வினைத்திறன் னொண்ட உள்ளக கணக்காய்வு செய்து காலாநதரம் போன்றே வளர்சிசி ரீதியான அறிக்கை சமர்ப்பிப்பதன் மூலம் முகாமைத்துவத்திற்கு உதவியிக்கும் தேவைப்பாடு உள்ளகக் கணக்காய்வு வலியுறுத்தப்படல் வேண்டும். அதற்குத் தேவையான மனித சக்திகள் மற்றும் ஏனைய வளங்கள் போதுமா அளவில் பெறறுக் கொடுக்கும் தேவைப்பாடும் வலியுறுத்தப்படுகின்றது.

ஒப்பம்: வசன்த ஏக்கநாயக்க
முகாமைத்துவக் கணக்காய்வு பணிப்பாளர் நாயகம்,
நிதி அமைச்சின் செயலாளருக்குப் பதிலாக.

பிரதி: கணக்காய்வாளர் நாயகம்.

# கருத்திட்டத்திற்கான உள்ளக கணக்காய்வு வழிகாட்டி

## 1. வெளிநாட்டுதவிக் கணக்கு

| தொடர் இல | விபரம் | விசாரணைகள் | அவதானிப்பு | அவதானிப்புக்கள் பற்றிய விளக்கமளித்தல் | மதிப்பீடு |
|---|---|---|---|---|---|
| 1 . | ***நிதியீட்டு மூலங்களை இனங்காணல்*** | | | | |
| i | செயற்திட்டங்களுக்கான நிதி ஏற்பாடுகள் பின்வரும் நிதிக் குறியீடுகளின் கீழ் வழங்கப்பட்டுள்ளது. அதனை தெளிவாக இனங்காணல் வேண்டும்.<br>• வெளிநாட்டுதவிக் கடன் 12<br>• வெளிநாட்டுதவிக் கொடை 13<br>• மீள்நிரப்புச் செய்யத்தக்க வெளிநாட்டுதவிக் கடன் 14<br>• மீள்நிரப்புச் செய்யத்தக்க வெளிநாட்டுதவிக் கொடை 15<br>• ஈடுசெய்யும் நிதியம் 16<br>• வெளிநாட்டு உதவி சார்ந்த உள்நாட்டு நிதியங்கள் 17 | வருடாந்த மதிப்பீடு | | | |
| ii | வெளிநாட்டு உதவி வகையினை சரியாக இனங்காணல் வேண்டும்.<br>• செயற்திட்ட உதவி (கடன், கடன் தொடர், கொடை)<br>• தொழில்நுட்ப உதவி (கடன், கொடை)<br>• பொருளுதவி (கடன், கொடை)<br>• நிகழ்ச்சித் திட்ட உதவி (கடன், கொடை)<br>• சென்மதி நிலுவை வசதிகள் (கடன், கொடை) | நி.பி. 611 | | | |
| 2 . | ***செயற்திட்ட முன்னாயத்த தேவைகள்*** | | | | |
| i | வருடாந்தச் செலவின மதிப்பீட்டு செலவின வரைவிலே செயற்திட்ட செலவினத்தை உட்படுத்த முன்னர் பின்வரும் நிபந்தனைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.<br>• மொத்த செலவினத்தை மதிப்பீடு செய்தல்.<br>• ஒப்பந்தங்களில் கைச்சாத்திடல்.<br>• நிதிப் பாய்ச்சல் கால எல்லையினைத் தயாரித்தல்.<br>• பின்னூட்டல் வேலைத் திட்டம் மற்றும் செயற்திட்டத் பூர்த்தியின் தொடர்ச்சித் தன்மையினை உறுதி செய்வதற்கான வேலைத்திட்ட நடவடிக்கைகள். | நி.பி. 34 | | | |
| ii | ஆரம்ப அனுமதியினைப் பெற்றுக் கொள்வதற்கு முன்னர் செயற்திட்டம் ஒன்றிலே பின்வரும் பணிகளை மேற்கொள்ளக் கூடாது.<br>• சாத்தியவள ஆய்வு அல்லது தொடர்புடைய பணிகள்<br>• வரவு செலவுத் திட்ட நிதியத்தினைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் சிறிய செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.<br>• யாதேனுமொரு துறைசார் திட்டமொன்றினை அல்லது நிகழ்ச்சித் திட்டமொன்றினை நடைமுறைப்படுத்தல். | நி.பி. 35 | | | |
| iii | பின்வரும் பணிகளை மேற்கொள்வதற்கு முன்னர் செயற்திட்டத்திற்கான இறுதி அனுமதியினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.<br>• அரச முதலீட்டு நிகழ்ச்சித் திட்டத்தினுள் அட்டவணைப் படுத்தப்படல்.<br>• செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு நிதி வழங்கல்.<br>• நிதியீட்டு நிறுவனத்துடன் இறுதி பேச்சு வார்த்தைகளை மேற்கொள்ளல். | நி.பி. 36 | | | |
| iv | செயற்திட்டத்திற்கு வெளிநாட்டு வள பணிப்பாளர் நாயகத்தின் முறையான அனுமதியுடன் வெளிநாட்டு உதவியினைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதனை உறுதி செய்து கொள்ளவும். | நி.பி. 610 | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| v | ஆகக் குறைந்தது அமைச்சரவையின் அனுமதியாவது இல்லாமல் வெளிநாட்டு உதவியினை எதிர்பார்த்து யாதேனுமொரு செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதனை பரீட்சித்துக் கொள்ளவும். | நி.பி. 621 (2)∴ அ.க.சு. 30∴94 (4.2.1) | | | |
| **3 .** | ***வரவு செலவுத் திட்ட ஏற்பாடுகளை ஒதுக்கிக் கொள்ளல்.*** | | | | |
| i. | செயற்திட்டத்திற்கான வெளிநாட்டு உதவியினைப் பயன்படுத்துவதற்கு வருடாந்த மதிப்பீடுகளினுள் ஏற்பாடுகள் ஒழுங்கு செய்துகொள்ளப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிசெய்து கொள்ளவும். | நி.பி. 621 | | | |
| ii. | நேரடியாக அமைச்சுக்கள் ∴ திணைக்களங்களிடம் கிடைக்கப் பெற்ற நிதியினை (கொடைகள்) பயன்படுத்துவதற்காக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிசெய்து கொள்ளவும். | நி.பி. 625(3) | | | |
| iii. | எதிர்பாராத நிகழ்வுகளுடன் தொடர்புடையாகக் கிடைக்கப் பெற்ற உபகரணங்கள் மற்றும் பொருள் ரீதியான நன்கொடைகளுக்காக பின்னர் முறையாக ஏற்பாடுகள் செய்துகொள்ளப்பட்டுள்ளனவா என்பதனை பரீட்சித்துக் கொள்ளவும். | நி.பி. 622 | | | |
| iv. | அரச கூட்டுத்தாபனங்கள்∴ தொழில் முயற்சிகளுடன் தொடர்புடைய வெளிநாட்டு உதவிகளுக்கு உரிய நேர்வரிசை அமைச்சின் கீழ் செலவின மதிப்பீடுகளில் ஏற்பாடுகள் செய்துகொள்ளப்பட்டுள்ளனவா என்பதனை பரீட்சித்துக் கொள்ளவும். | நி.பி. 623 | | | |
| v. | செயற்திட்டம் ஒன்றின் ஒரு பகுதியாக காணப்படுகின்ற தொழில்நுட்ப ஒத்துழைப்புக்களுக்காக ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளனவா என்பதனை பரீட்சித்துப் பார்க்கவும். | நி.பி. 621(4) | | | |
| vi. | பொருள் உதவிகளை உபயோகிப்பதற்காக வெளிநாட்டு வளங்கள் பணிப்பாளர் நாயகத்திடம் இருந்து ஏற்பாடுகள் பெறப்பட்டனவா என்பதனைப் பரீட்சித்துக் கொள்ளவும். | நி.பி. 625(7) | | | |
| **4** | ***வெளிநாட்டு உதவிகளை கணக்குகளில் பதிதல்.*** | | | | |
| i. | செயற்திட்டத்தினுள் இடம்பெறக் கூடிய முறைகேடு அல்லது மோசடி என்பவற்றினைத் தடுக்கக் கூடிய வகையில் முறையான உள்ளக நிருவாக முறையொன்றினை உறுதி செய்து கொள்வதற்கான கடமைகளை பகிர்ந்தளிக்கும் போதிய தன்மையினை உறுதி செய்வதற்கு மேற்கொண்டு அதிகாரப் பகிர்வினை பரீட்சித்துக் கொள்ளவும். | நி.பி. 135 – 139 | | | |
| ii. | கணக்கீட்டு உத்தியோகத்தர், வெளிநாட்டு உதவிச் செலவினம் பற்றி மாதாந்தக் கணக்குச் சுருக்கங்கள் அல்லது மாற்றல் கட்டளைகள் என்பன ஊடாக திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களத்திற்கு அறிவிக்கின்றாரா என்பதனை பரீட்சித்துப் பார்க்கவும். | நி.பி. 625 (1) ஈ 139 நி.பி. 625 (3) ஆ | | | |
| iii. | குறைநிரப்பு ∴ வகைமாற்ற நடைமுறைகளின் ஊடாக ஏற்பாடுகள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் அனைத்து மாற்றங்கள் தொடர்பாகவும் திறைசேரியின் செயற்பாடுகள் திணைக்களத்திடம் அறிவிக்கப்படுகின்றனவா என்பதனை பரீட்சித்துக் கொள்ளவும். | அ.க.சு. 30∴94 (5.6.1) | | | |
| iv. | வெளிநாட்டுதவி நிதியினை தனிப்பட்ட வருமானத் தலைப்பிற்கு, விடய இலக்கத்திற்கு செலவு வைப்பதற்குத் தேவையான தகவல்கள் அரச கணக்குகள் பணிப்பாளர் நாயகத்திற்கு தாமதமின்றி வழங்கப்படுகின்றனவா என்பதனை பரீட்சித்துக் கொள்ளவும். | நி.பி. 623 | | | |
| v. | முற்பணக் கணக்கு ஒன்றின் கீழ் பயன்படுத்தப்பட்ட நிதித் தொகை மற்றும் அதன் நிதியீட்டுத் தகவல்கள் என்பவற்றினை முற்பணக் கணக்கின் கீழ் குறிப்பொன்றின் மூலம் காட்டப்பட்டுள்ளனவா என்பதனை பரீட்சித்துக் கொள்ளவும். | நி.பி. 621(7) | | | |
| vi. | அரச கூட்டுத்தாபனங்கள் ∴ தொழில் முயற்சிகளுக்குப் பெற்றுக் கொடுக்கின்ற வெளிநாட்டுதவி கடன்களுக்காக தவணைக் கொடுப்பனவுகள் மற்றும் வட்டி என்பன உரிய முறையில் மீளச் செலுத்தப்படுகின்றனவா என்பதனைப் பரீட்சித்துக் கொள்ளவும். | நி.பி. 623 | | | |
| vii. | செயற்திட்டக் கணக்குகள் அட்டுறு அடிப்படையில் தயாரிக்கப்படல் மற்றும் இரட்டைப் பதிவுக் கோட்பாடுகளின் பிரகாரம் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் என்பன பேணிவரப்படுகின்றனவா என்பதனை பரீட்சித்துக் கொள்ளவும். | நி.பி. 626 | | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| viii. | மீள்நிரப்பும்போது செலாவணி விகித மாற்றங்களின் சீராக்கப்பட்ட தாக்கங்கள், செயற்திட்டத்தின் இறுதிக் கணக்குகளில் காட்டப்படுகின்றனவா என்பதனை பரீட்சித்துக் கொள்ளவும். | அ.க.சு. 2002∴149 | | | | |
| ix. | கணக்காய்வாளர் நாயகத்தினால் உறுதிப்படுத்தப்பட்ட ஆண்டிறுதிக் கணக்குகள் கொடை வழங்குநர்களுக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டுமென ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் சந்தர்ப்பங்களில் அவ்வாறு மேற்கொள்ளப்படுகின்றனவா என்பதனை பரீட்சித்துக் கொள்ளவும். | நி.பி. 626 | | | | |
| **4 .1** | **தொழில்நுட்ப ஒத்துழைப்பு நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் கிடைக்கப்பெறும் நிபுணத்துவச் சேவைகள், புலமைப் பரிசில்கள் மற்றும் பயிற்சிகள்** | | | | | |
| i. | நிபுணத்துவ சேவைகள், புலமைப் பரிசில்கள் மற்றும் பயிற்சி வசதிகள் பற்றி உரிய படிவங்களின் மூலம் காலாண்டு அறிக்கைகள் கணக்காய்வாளர் நாயகத்திற்குப் பிரதியுடன் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றனவா என்பதனை பரீட்சித்துக் கொள்ளவும். | நி.பி. 625 (6)ஆ | | | | |
| **4 .2** | **செயற்திட்டமொன்றின் ஒரு பகுதியாகக் கிடைக்கும் தொழில்நுட்ப உத்துழைப்பு** | | | | | |
| i. | செயற்திட்ட உதவியொன்றின் செலவினத்தின் ஒரு பகுதியாக கிடைக்கப்பெறும் தொழில்நுட்ப ஒத்துழைப்பினை அந்த செயற்திட்டத்தின் ஏனைய ஆக்கக் கூறுகளாகக் கருதி கணக்கு வைக்கப்பட்டுள்ளனவா என்பதனை பரீட்சிக்கவும். | நி.பி. 625(6)அ,உ | | | | |
| **4 .3** | ***செயற்திட்ட உதவிகள், தொழில்நுட்ப ஒத்துழைப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் அல்லது எதிர்பாராத சந்தர்ப்பங்களின் கீழான பொருட்கள் மற்றும் உபகரணங்களாகக் கிடைக்கப்பெறும் கொடைகள்*** | | | | | |
| i. | மேலே குறிப்பிட்டுள்ளவாறான வெளிநாட்டுதவிகளின் கிடைப்பனவு பற்றிய விபரங்கள் பொருள் பட்டியலில் அல்லது குறித்த பணிக்காக பேணிவரப்படும் பிற பதிவேடு ஒன்றில் குறிக்கப்படுகின்றனவா என்பதனை உறுதி செய்து கொள்ளவும். | நி.பி. 622 | | | | |
| ii. | மேலே குறிப்பிட்டுள்ள விதத்தில் வெளிநாட்டுதவியொன்று கிடைக்கப்பெறும் பட்சத்தில் அதில் கணிப்பிடப்பட்ட பெறுமதியினை அரச கணக்குகள் பணிப்பாளர் நாயகத்திடம் பெற்றுக்கொண்ட கணக்குக் குறியீட்டின் கீழ் கணக்கு வைக்கப்பட்டுள்ளனவா என்பதனை பரீட்சித்துக் கொள்ளவும். | நி.பி. 625 (6)அ, ஆ,ஈ ∴ அ.க.சு. 30∴94 (5.2.1. மற்றும் 3) | | | | |
| iii. | அரச கணக்குகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பும் உரிமை மாற்றுக் கட்டளைகளில் சொத்துக்கள் பதியப்பட்ட ஆவணத்தின் பக்க இலக்கம் குறிப்பிடப்பட்டுள்ள சான்றிதழ் ஒன்று இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை பரீட்சித்துக் கொள்ளவும். | அ.க.சு. 30∴94 (5.2.5) | | | | |
| iv. | வெளிநாட்டுதவி ஏற்பாடுகளில் செய்த வரவு வைப்புக்கள் நி.பி. 14 ஆவது அத்தியாயத்தின் பிரகாரம் அரச கணக்குகள் பணிப்பாளர் நாயகத்திற்கு காலாண்டிற்கு ஒருமுறை அறிக்கையிடப்படுகின்றனவா என்பதனை பரீட்சிக்கவும். | அ.க.சு. 625 (1) ஊ∴ அ.க.சு. 30∴94 (5.5.6) | | | | |
| v. | உபகரணங்களின் உரிமையினை குறித்த நிகழ்ச்சித் திட்டம் முடிவடையும் வரையில் கொடை வழங்குபவரிடம் வைத்துக்கொள்ளும் சந்தர்ப்பத்தில் தனியானதொரு பொருள் பட்டியல் அதற்காக பேணப்படுகின்றனவா என்பதனை பரீட்சித்துக் கொள்ளவும். | நி.பி. 625 (6) ஊ | | | | |
| vi. | நிகழ்ச்சித் திட்டம் முடிவடையும்போது அந்த உபகரணங்களின் உரிமையினை அரசாங்கத்திற்கு மாற்றும்போது மதிப்பீட்டுச் சபை ஒன்றின் மூலம் அதன் பெறுமதி தீர்மானிக்கப்பட்டுள்ளதா என்பதனை பரீட்சித்துக் கொள்ளவும். | நி.பி. 625 (6) ஊ | | | | |
| vii. | நிகழ்ச்சித் திட்டத்தின் இறுதியில் உரிமை கொள்ளப்பட்ட உபகரணங்களைக் கொடையாகக் கருதி நி.பி. 625(1) இன் பிரகாரம் கணக்கு வைக்கப்பட்டுள்ளனவா என்பதனை பரீட்சித்துக் கொள்ளவும். | நி.பி. 625 (6) ஊ | | | | |
| **4 .4** | ***உபகரணங்கள், சேவைகள் மற்றும் பொருட்களாகக் கிடைக்கப்பெறும் கடன்கள்*** | | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| i. | கடன் மற்றும் கடன் தொடருடன் தொடர்புடையதாக மேற்கொள்ளப்படும் விளைவுகள் பற்றி திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களத்தினால் அனுப்பப்படும் உரிமை மாற்றுப் பத்திரத்துடன் ஒப்பிட்டு ஒதுக்கீட்டுப் பேரேட்டிலே வெளிநாட்டு உதவி ஏற்பாடுகளை பதிவு செய்துள்ள ஆவணப்பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிசெய்து கொள்ளவும். | நி.பி. 625 (2) ஆ | | | |
| ii. | உபகரணங்கள் மற்றும் பொருட்களுடன் தொடர்புடைய விபரங்களை பொருள் பட்டியலில் ∴ அதற்காக பேணிவரப்படும் வேறொரு பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளனவா என்பதனைப் பரீட்சிக்கவும். | நி.பி. 625 (2) இ | | | |
| iii. | காரணம் எதுவாயினும், குறித்த செலவு வைத்தல்கள் பொருத்தமற்றதெனக் கருதும் பட்சத்தில் அது பற்றி வெளிநாட்டு வளப் பணிப்பாளர் நாயகத்திற்கு பிரதி ஒன்றுடன் திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளனவா என்பதனை பரீட்சித்துக் கொள்ளவும். | நி.பி. 625 (2) ஈ | | | |
| iv. | உபகரணம் மற்றும் பொருட்களை பெற்றுக் கொண்டதாகவும், ஆவணங்களில் பதிந்ததாகவும், மற்றும் செலவு வைத்தல் சரியெனவும் உறுதிப்படுத்தி நி.பி. இணைப்பு 15 இன் பிரகாரம் திறைசேரியின் செயற்பாடுகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு காலாண்டிற்கு ஒருமுறை அறிக்கையிடப்படுகின்றனவா என்பதனை பரீட்சிக்கவும். | நி.பி. 625 (2) உ | | | |
| **4.5** | ***கருத்திட்ட ரீதியான நிதிக் கொடைகள், கடன்கள் அல்லது தொழில்நுட்ப ஒத்துழைப்புகள்.*** | | | | |
| i. | அமைச்சுக்கள் ∴ திணைக்களங்களிடம் நேரடியாக நிதி (மாற்றல்கள்) கிடைக்கும்போது அவற்றினை திறைசேரியில் வைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளனவா என்பதனைப் பரீட்சிக்கவும். | நி.பி. 625 (3) | | | |
| ii. | யாதேனுமொரு ஒப்பந்தம் ஒன்றினை செய்துகொள்வதற்கு அல்லது செலவினை மேற்கொள்வதற்கு முன்னர் கொடை வைப்புக் கணக்கில் இருந்து நிதி ஒதுக்கப்பட்டுள்ளனவா என்பதனைப் பரீட்சித்துக் கொள்ளவும். | நி.பி. 625 (3) | | | |
| iii. | செலவினத்தைக் காசேட்டில் செலவு வைத்து மற்றும் வெளிநாட்டு உதவி ஏற்பாடுகளை வாக்குப் பணக் கணக்கில் வரவு வைத்து சரியான முறையில் கணக்கு வைக்கப்படுகின்றனவா என்பதனைப் பரீட்சிக்கவும். | நி.பி. 625 (3) அ | | | |
| iv. | நிதிப் பிரமாணக் குறிப்பின் 16 ஆவது அத்தியாயத்தின் ஊடாக காலாண்டிற்கு ஒருமுறை திறைசேரிச் செயற்பாட்டுத் திணைக்கள பணிப்பாளர் நாயகத்திற்கும் மற்றும் வெளிநாட்டு வளப் பணிப்பாளர் நாயகத்திற்கும் வெளிநாட்டுதவி செலவினம் பற்றி அறிக்கையிடப்படுகின்றனவா என்பதனைப் பரீட்சித்துக் கொள்ளவும். | நி.பி. 625 (3) அ | | | |
| v. | வெளிநாடுகள் அல்லது முகவர் நிறுவனங்களிடம் நிதி மாற்றல் வடிவத்தில் கடன் தொகையொன்று கிடைக்கப் பெறும்போது அது தொடர்பாக நி.பி. 625 (3) இல் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளனவா என்பதனை பரீட்சிக்கவும். | நி.பி. 625 (4) | | | |
| **5.** | ***வெளிநாட்டுதவிப் பயன்பாடு*** | | | | |
| **5.1** | ***மீள்நிரப்பும் முறை*** | | | | |
| i | மீள் செலுத்தத்தக்க வெளிநாட்டு உதவிகளுக்காக தனியானதொரு வங்கிக் கணக்கு, காசேடு மற்றும் முற்பணக் கணக்கொன்று என்பன சம்பந்தப்பட்ட அமைச்சு ∴ திணைக்களத்தினால் பேணி வரப்படுகின்றனவா என்பதனை உறுதி செய்து கொள்ளவும். | அ.க.சு. 30∴94 (5.6.4) | | | |
| ii | அரச கணக்குகள் சுற்றறிக்கை 30∴94 இன் இணைப்பு இலக்கம் எை இன் பிரகாரம் ஒழுங்கு முறைப்படி இலக்கமிடப்பட்ட மீள்நிரப்பல் விண்ணப்பங்கள் ஒவ்வொரு மாத்தினதும் 7 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் திறைசேரியின் செயற்பாட்டுத் திணைக்கள பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பப் படுகின்றனவா என்பதனை உறுதி செய்து கொள்ளவும். | அ.க.சு. 30∴94 (5.6.4) | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| iii | ஒவ்வொரு மாத்தினதும் 07 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் மீள் நிரப்பத்தக்க முற்பணக் கணக்கின் உறுதிபடுத்தப்பட்ட வங்கிக் கணக்கிணக்கக் கூற்றினை திறைசேரிச் செயற்பாடுகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பப்படுகின்றனவா என்பதனை உறுதி செய்து கொள்ளவும். | அ.க.சு. 30.∵94 (5.6.4) | | | |
| iv | அரச தொழில் முயற்சிகளுக்கான மீள் நிரப்பத்தக்க வெளிநாட்டு உதவிகளை கோரும்போது தேவையான திருத்தங்களுடன் 30.∵94 அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ளை ஆவது இணைப்பினைப் பயன்படுத்தி அதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் ஊடாகவும் அரச தொழில் முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தினூடாகவும் திறைசேரிச் செயற்பாடுகள் பணிப்பாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்படுகின்றனவா என்பதனை பரீட்சிக்கவும். | அ.க.சு. 30.∵94 (5.6.17) | | | |
| v | மீள் நிரப்பும் சகல கொடுப்பனவுகளையும், மத்திய வங்கியிலுள்ள திறைசேரியின் பிரதிச் செயலாளரின் கணக்கிற்கு செலவு வைத்தல் வேண்டும். | நி.பி. 625 (5) ஈ | | | |
| vi | குறிப்பிடத்தக்களவு பாரிய பெறுமதிமிக்க மீள்நிரப்பு வேண்டுகோள்கள் விடுக்கப்படும் சந்தர்ப்பங்களில் மாதாந்தம் சமர்ப்பிக்கப்படும் சமர்ப்பிக்கப்படும் கோரிக்கைகளை விட அந்த கோரிக்கைகள் தாமதமின்றி சமர்ப்பிக்கப்படுகின்றனவா என்பதனை உறுதி செய்து கொள்ளவும். | ஆ.அ.வ -டுனுர்-2007 அத்தியாயம் 9 | | | |
| vii | கடன் ஒப்பந்தத்தின் விதிமுறைக்காக ஈடுபடுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டில்லாத சந்தர்ப்பங்களில் அதனை பாவிக்கக் கூடிய அளவிற்கு நிதி மற்றும் நிருவாக ஆற்றல்கள் காணப்படுகின்றனவா என்பதனை உறுதி செய்து கொள்ளவும். | ஆ.அ.வ -டுனுர்-2007 அத்தியாயம் 9 | | | |
| viii | செய்துகொண்ட ஒப்பந்தங்களில் உள்ள நிபந்தனைகளுக்கு ஏற்ப குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து செலவினங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பது பற்றியும் மற்றும் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் ஒருவரினால் செலவினக் கூற்றிற்கு பெற்றுக்கொடுக்கும் சான்றிதழ் பற்றி திருப்தியடைய முடியுமா என்பது பற்றி உறுதி செய்து கொள்ளவும். | ஆ.அ.வ -டுனுர்-2007 அத்தியாயம் 9 | | | |
| ix | ஆசிய அபிவிருத்தி வங்கி விசாரணைகள் குழு அல்லது சுயாதீன கணக்காய்வாளர்கள் கோரும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சமர்ப்பிக்கக் கூடியவாறு அறிக்கைகள் மற்றும் ஆவணங்கள் வழிகாட்டல்களுக்கு ஏற்ப பராமரிக்கப்படுகின்றனவா என்பதனைப் பரீட்சிக்கவும். | ஆ.அ.வ -டுனுர்-2007 அத்தியாயம் 9 | | | |
| x | வருமானக் கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள வருமான எல்லைகளுக்கு உட்படுவதற்காகவென கொடுப்பனவுகள் பகுதி பகுதியாக காட்டாமல் இருப்பது பற்றி உறுதி செய்துகொள்ளவும். | ஆ.அ.வ -டுனுர்-2007 அத்தியாயம் 9 | | | |
| xi | செயற்திட்ட முகாமையினால் அறிமுகம் செய்துள்ள உள்ளக கட்டுப்பாட்டு உபாயங்களின் தகைமையினை மதிப்பீட்டிற்கு உட்படுத்துக அவ்வாறே வருமானக் கூற்று விதிமுறைகளுக்கு உட்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய கணக்காய்வு அபிப்பிராயத்தினை பரீட்சிக்கவும். | ஆ.அ.வ -டுனுர்-2007 அத்தியாயம் 9 | | | |
| xii | கூட்டுக் கணக்குகளுடன் தொடர்புடைய ஆவணங்களை (குழசஉந யுஉஉழரவெ னுழஉரஅநவெள) அடிப்படையாகக் கொண்டு மீள் நிரப்பப்பட்ட விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும்போது இசைவுறாத செலவினங்களைத் தடுப்பதற்காக அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்களினால் முதலாவது மற்றும் இரண்டாவது சான்றுப்படுத்தலை உறுதி செய்தல் போன்ற அறிமுகம் செய்துள்ள உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளைப் பரீட்சிக்கவும். | யுனுடீ-டுனுர்-2007 உாயிவநச 9 | | | |
| xiii | தகைமை உடனான அபிவிருத்தி நிதி நிறுவனங்களின் ஊடாக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழல் முயற்சியாளர்களுக்கு பெற்றுக்கொடுக்கப்படுகின்ற துணைக் கடன்களை அனுமதிக்கும் மற்றும் நிதியங்களை விடுவித்துக் கொள்வதற்கான தனி விண்ணப்பப் படிவ நடவடிக்கையினை (ளுயுறு) பயன்படுத்தும்போது உதவி ஆவணங்களுடன் தேர்ந்தெடுக்கப்பட்ட மாதிரிகளைப் பரீட்சித்து உரிய நடவடிக்கை முறை பின்பற்றப்பட்டுள்ளனவா என்பதனை உறுதி செய்து கொள்ளவும். | ஆ.அ.வ -டுனுர்-2007 அத்தியாயம் 9 | | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| xiv | மீள்நிரப்புக் கோரிக்கைகளை நிராகரிப்பதற்கு அல்லது தாமதப்படுத்துவதற்கான காரணங்களை இனங்கண்டு திரண்ட நிதியத்தின்மீது தேவையற்ற அழுத்தங்கள் ஏற்படுவதனைத் தடுப்பதற்காக மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளைப் பரீட்சிக்கவும். | நி.பி. 625(5)அ | | | | |
| xv | நிதிப் பிரமாணங்கள், உரிய சுற்றறிக்கைகள் மற்றும் நிதி வழங்கும் நிறுவனங்களின் வழிகாட்டல்கள் என்பவற்றின் பிரகாரம் மீள் நிரப்பல் விண்ணப்பப் படிவங்களினைத் தயாரித்து சமர்ப்பிக்கப்படுகின்றனவா என்பதனை உறுதி செய்துகொள்ளவும். | நி.பி. 625(5)ஆ | | | | |
| xvi | மீள்நிரப்பத்தக்க வெளிநாட்டு உதவிகளினால் பொருத்தமில்லாத செலவினங்களை மீள்நிரப்புவதற்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளதா என்பதனைப் பரீட்சித்து திணைக்களத் தலைவர்கள் அவ்வாறான நிலைகளைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளனரா என்பதனை உறுதி செய்து கொள்ளவும். | அ.க.சு. 30.்.94 (5.6.18) | | | | |
| xvii | விண்ணப்பித்த மற்றும் கிடைத்த மீள் நிரப்பங்களை ஒப்பிடல் மற்றும் யாதேனுமொரு மாற்றம் இருப்பின் அது பற்றி இலங்கை மத்திய வங்கியின் பிரதான கணக்காளருக்கும், அரச நிதி, திறைசேரி தொழிற்பாடு மற்றும் வெளிநாட்டு வளம் ஆகிய திணைக்களங்களின் பணிப்பாளர் நாயகங்களுக்கு அறிவிப்பதற்கும் அது பற்றிய நிதி நிறுவனத்துடன் செயலாற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளனவா என்பதனைப் பரீட்சிக்கவும். | அ.க.சு. 30.்.94 (5.6.11) | | | | |
| xviii | மீள் நிரப்பல் கோரிக்கைகளை நிராகரிக்கும் போதும் திறைசேரியின் அனுமதியுடன் அந்த செலவினங்களை திரண்ட நிதியத்தின் ஏற்பாடுகளுக்கு வரவு வைக்கப்பட்டுள்ளனவா என்பதனைப் பரீட்சிக்கவும். | அ.க.சு. 30.்.94 (5.6.12) | | | | |
| xix | மீள் நிரப்பங்களுக்கான கோரிக்கைகள் மற்றும் கிடைப்பனவுகள் பற்றிய பதிவுகள் 30.்.94 அரச கணக்குகள் சுற்றறிக்கையின் எஎை ஆவது இணைப்பின் பிரகாரம் பேணிவரப்படுகின்றனவா என்பது பற்றி பரீட்சிக்கவும். | அ.க.சு. 30.்.94 (5.6.14) | | | | |
| xx | பிரதான கணக்கீட்டு மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் மீள் நிரப்பல் கிடைக்க வேண்டிய சகல செயற்திட்டங்களுக்கும் திரண்ட செலவினம், மீள்நிரப்புக் கோரிக்கைகள் மற்றும் கிடைப்பனவுகளை காட்டுகின்ற அறிக்கை ஒன்றினை 30.்.94 அரச கணக்குகள் சுற்றறிக்கையின் இணைப்பு எஎை இன் பிரகாரம் அரச கணக்குகள் மற்றும் வெளிநாட்டு வளங்கள் ஆகிய திணைக்களப் பணிப்பாளர் நாயகங்களுக்கு சமர்ப்பிக்கப்படுகின்றனவா என்பதனைப் பரீட்சிக்கவும். | அ.க.சு. 30.்.94 (5.6.15) நி.பி. 625(5)ஒ | | | | |
| **5.3** | ***விசேட வெளிநாட்டு நாணயக் கணக்கு*** | | | | | |
| **i.** | விசேட வெளிநாட்டு நாணயக் கணக்குகள் செயற்பாட்டு அடிப்படையில் காணப்படும்போது மீள்நிரப்பல் விண்ணப்பப் படிவங்கள் உரிய ஆகக் குறைந்த தொகையின் கீழ் மாதாந்தம் சமர்ப்பிக்கப்படுகின்றனவா என்பது பற்றியும், அவ்வாறு இல்லாத சந்தர்ப்பங்களில் பெற்றுக்கொண்ட முற்பணத்தைச் செலவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளனவா என்பதனைப் பரீட்சிக்கவும். | நி.பி.625(8)ஆ | | | | |
| **ii.** | விசேடவெளிநாட்டு நாணயக் கணக்கின் ஊடாக திறைசேரியின் பிரதிச் செயலாளரின் கணக்கிற்கு மீள்நிரப்பத்தக்க வெளிநாட்டு உதவிகளை மீள்நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளனவா என்பதனைப் பரீட்சிக்கவும். | நி.பி.625(8)இ<br>அ.க.சு.30.்.94 (5.9.3) | | | | |
| **iii.** | நிதியினை விடுவிக்க விண்ணப்பிக்கும் போது அரச கணக்குகள் சுற்றறிக்கை 165.்.2003 இல் குறிப்பிடப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பாகக் காட்டப்படும் இசைவுகள் பற்றி மதிப்பீடு செய்யவும். | அ.க.சு. 165.்.2003 | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **iv.** | மத்திய வங்கியின் (வெளிநாட்டு நிதி) நிதிக் கூற்று கிடைக்கப் பெற்றதன் பின்னர் அதனைத் தனிப்பட்ட முறையில் செயற்திட்ட பணிப்பாளர் ∴ கணக்காளரின் மூலம் ஒப்பீடு செய்து முரண்பாடுகள் இருப்பின் சீர்செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றனவா என்பதனை உறுதிசெய்து கொள்ளவும். | அ.க.சு. 30∴94(5.6.4) அ.க.சு. 165∴2003(7) | | | |
| **v.** | மத்திய வங்கிக் கூற்றுக்கள் கிடைப்பதில் தாமதம் ஏதும் இருப்பின் அதனைப் பெறுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளனவா என்பது பற்றிப் பரீட்சித்துப் பார்க்கவும். | அ.க.சு. 165∴2003 (7) | | | |
| **vi.** | திறைசேரி தொழிற்பாட்டுத் திணைக்களத்தினால் அனுப்பப்படும் வரவு வைத்தல் பற்றிய அறிவிப்புக்கள் தொடர்பில் உரிய செலவினத் தலைப்பிற்கு வாக்குப் பண ஏட்டில் வரவு வைத்ததன் பின்னர் மீண்டும் அனுப்பப்பட்டுள்ளனவா என்பதனைப் பரீட்சிக்கவும். | அ.க.சு. 165∴2003 (8) | | | |
| **vii.** | விசேட கணக்குகள் சுழற்சி அடிப்படையாகக் கொள்ளாத சந்தர்ப்பத்தில் பெற்றுக்கொண்ட முற்பணத்தினை மீளச் செலுத்திய தொகை மற்றும் மீதி என்பன காட்டப்படும் மாதாந்தக் கூற்றொன்றினை வெளிநாட்டு வளங்கள், திறைசேரிச் செயற்பாடு மற்றும் முகாமைத்துவக் கணக்காய்வு ஆகிய திணைக்களங்களுக்கு சமர்ப்பிக்கப்படுகின்றனவா என்பதனை பரீட்சித்துக் கொள்ளவும். | அ.க.சு. 30∴94 (5.9.5) | | | |
| **viii.** | கருத்திட்டத்தின் தேவைக்கேற்ப குறித்த நிறுவனங்களின் அனுமதியுடன் முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது கட்டங்களுக்குச் சொந்தமான முற்பணக் கணக்குகளை செயற்படுத்த முடியும். அவ்வாறான எந்தவொரு கட்டத்துடனும் தொடர்புடையதாக உள்ள தீர்க்கப்படாத மீதிகளை இலகுவாக இனங்காண்பதற்காக முற்பண ஆவணங்கள் உரிய முறையில் பராமரிக்கப்படுகின்றனவா என்பதனை பரீட்சிக்கவும். | அ.க.சு. 2002∴149 (3.10) | | | |
| **ix .** | கருத்திட்ட முகாமைத்துவப் பிரிவு∴செயற்படுத்தும் முகவர் கட்டுநிதி தொடர்பாக பின்வரும் ஆவணங்களை உரிய முறையில் பராமரிக்கப்படுகின்றனவா என்பதனை பரீட்சிக்கவும்.<br>- காசேடு<br>- வாக்குப் பணப் பேரேடு<br>- நாட்குறிப்பு<br>- நிதி விடுவிப்பு விண்ணப்பப் பதிவேடு<br>- ஒவ்வொரு கட்டங்களுடன் தொடர்புடைய கட்டுநிதி பற்றிய ஆவணங்கள்<br>- கட்டுநிதிக் கணக்கிணக்கப் பதிவேடு<br>- முதலாவது மற்றும் இரண்டாவது முற்பணங்களை விடுவிக்கும் சாதாரண நாட்குறிப்புக் கணக்கு<br>- மூன்றாம் கட்ட முற்பணக் கணக்குகளை விடுவிப்பதற்கான பதிவேடு<br>- செயற்படுத்தும் முகவர்களின் மூன்றாம் கட்ட முற்பண நிதிப் பதிவேடு | அ.க.சு. 2002∴149 (4.1) | | | |
| **x.** | கடன் வழங்கும் நிறுவனத்தின் அனுமதி கிடைக்காத செலவினம் ஒன்றினை மேற்கொண்டுள்ளபோது அப்போதைய நிலையில் மீள்நிரப்புவதற்காக விண்ணப்பிக்கப்பட்டுள்ளனவா என்பதனைப் பரீட்சித்துப் பார்க்கவும். | அ.க.சு. 2002 ∴149 4.4 | | | |
| **xi.** | மேற்கொள்ளப்படும் ஒரு செலவினம் தொடர்பாக கடன் வழங்கும் நிறுவனத்தின் அனுமதி கிடைக்கப் பெறாதபோது நாணயமாற்று விகித பிரதிகூலங்கள் குறைவாக ஏற்படும் விதத்தில் தாமதமின்றி அத்தொகையினை முற்பணக் கணக்கினைத் தீர்ப்பதற்காக அல்லது கட்டாய விண்ணப்பப் படிவத்திலிருந்து குறைத்துக்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளனவா என்பதனைப் பரீட்சிக்கவும். | அ.க.சு. 2002 ∴149 4.4 | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **xii.** | முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது கட்டங்களுக்குரிய முற்பணக் கணக்குகளை பரஸ்பரமாக மாதாந்தம் ஒப்பீடு செய்யப்படுகின்றனவா என்பதனைப் பரீட்சிக்கவும். | அ.க.சு. 2002 ∴149 4.5 | | | |
| **xiii.** | கருத்திட்ட அலுவலகத்தினால் பராமரிக்கப்படும் முற்பணக் கட்டுப்பாட்டுக் கணக்கினை மத்திய வங்கியின் வங்கிக்கூற்றுடன் இணக்கம் செய்யப்படுகின்றனவா என்பதனை பரீட்சிக்கவும். | அ.க.சு. 2002 ∴149 4.5.1 | | | |
| xiv. | மத்திய வங்கியின் வங்கிக் கூற்றில் காட்டப்படுகின்ற நாணயமாற்று வீத மாற்றத்தினை அடிப்படையாகக் கொண்ட மீளமைக்கப்பட்ட மாற்றுப் பெறுமதியின் முழுமையான நன்மையினை அல்லது தீமையினை கருத்திட்டத்தின் இறுதிக் கணக்குகளில் தனியே காட்டப்படுகின்றனவா என்பதனைப் பரீட்சிக்கவும். | அ.க.சு. 2002 ∴149 4.6 | | | |
| **xv** | முழு ஆண்டிற்கான முற்பணக் கணக்கு மாற்றுக் கூற்றொன்றினைத் தயாரித்து இறுதிக் கணக்குகளில் இணைக்கப்பட்டுள்ளதா என்பதனைப் பரீட்சிக்கவும். | அ.க.சு. 2002 ∴149 4.7 | | | |
| **5.4** | ***பொருட்கள் அல்லது நிகழ்ச்சித் திட்ட உதவிகள் தொடர்பான நிதிப் பயன்பாடு*** | | | | |
| **i.** | வர்த்தகப் பொருட்கள் அல்லது நிகழ்ச்சித் திட்ட உதவிகளின் கீழ் கிடைக்கப் பெறுகின்ற சகல இறக்குமதிகளும் அரச வங்கிகளினூடாக இடம்பெறுதல் வேண்டும். கப்பல் ஏற்றல் ஆவணங்கள் எதனையும் இறக்குமதியாளர்களுக்கு நேரடியாகவே பெற்றுக் கொடுப்பதனைத் தவிர்த்துக் கொள்ளுமாறு வழங்குநர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். அந்த ஒழுங்கு விதிகள் பின்பற்றப்படுகின்றனவா என்பதனைப் பரீசித்துப் பார்க்கவும். | நி.பி. 625 (7) ஆ | | | |
| **ii.** | அரச கூட்டுத்தாபனங்கள்∴ தொழில்முயற்சிகள் என்பன பொருட்களை இறக்குமதி செய்யும்போது அதனைக் குறித்த நிறுவனத்தின் நிதியிலிருந்து மேற்கொள்ளப்படல் வேண்டும். அவ்வாறான கொடுப்பனவுகளை பெறுகின்ற வங்கியானது, மத்திய வங்கியில் உள்ள எதிர்தரப்பு நிதியக் கணக்கிற்கு வரவு வைக்கும் வகையில் மாற்றுதல் வேண்டும். அந்த ஒழுங்கு விதிகள் பின்பற்றப்படுகின்றனவா என்பதனைப் பரீட்சிக்கவும். | நி.பி. 625 (7) ஆ | | | |
| **6.** | **கருத்திட்டத்தை முடிவுறுத்தல்.** | | | | |
| **i** | நிறுவனத்தினால் கருத்திட்டம் முடிவுறுத்தப்படும்போது பின்வரும் நடைமுறைகள் பின்பற்றப்படல் வேண்டும்.<br>• வங்கிக் கணக்குகளை இணக்கம் செய்து தீர்த்து முடிவுறுத்தல்.<br>• உரிய நிதி நிறுவனங்களினால் வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டல்கள் மற்றும் ஒப்பந்த உடன்படிக்கைகளின் பிரகாரம் இறுதிக் கணக்குகளை தயாரித்திருத்தல் வேண்டும்.<br>• அக்கணக்குகளை வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்திற்கும் மற்றும் கணக்காளர் நாயகத்திற்கும் சமர்ப்பித்தல் வேண்டும்.<br>• நி.பி.401 இன் பிரகாரம் கருத்திட்ட சொத்துக்களை உரிமை கொள்வதனை முடிவுறுத்தல்.<br>• பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் ஆகியோர் வெளிநாட்டு உதவி வழங்கும் நிறுவனத்துடன் இணக்கம் கண்டுள்ளவாறு கருத்திட்டத்தை முடிவுறுத்தும் பணிகளை மேற்கொள்ள வேண்டியதுடன், உரிய காலத்தினுள் கருத்திட்ட கணக்குகளைத் தயாரித்து சம்பந்தப்பட்ட நிதி நிறுவனத்திடம் சமர்ப்பித்தல் வேண்டும்.<br><br>அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளனவா என்பதனை பரீட்சித்துப் பார்க்கவும். | நி.பி. 626 | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ii | விசேட (வெளிநாட்டு நிதி) கணக்கின் ஒவ்வொரு கட்டத்திலும் முற்பணக் கணக்குகளுடன் தொடர்புடைய கொடுப்பனவுகளுடன் தொடர்புடைய சகல உதவக் கூடிய ஆவணங்களையும் கணக்காய்வின் பின்னர் ஐந்து வருடங்களுக்கு பாதுகாப்பாக வைப்பதற்கும் மற்றும் கருத்திட்டம் முடிவடைந்ததன் பின்னர் உரிய அமைச்சிடம்.: திணைக்களத்திடம் அதனை ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளனவா என்பதனைப் பரீட்சிக்கவும். | | | | |

## 2. கருத்திட்ட ஆளணி

| தொடர் இல | விபரம் | விசாரணைகள் | அவதானிப்பு | அவதானிப்புக்கள் பற்றிய விளக்கமளித்தல் | மதிப்பீடு |
|---|---|---|---|---|---|
| 7. | ***கருத்திட்ட பணியாட்தொகுதியை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான முன் தேவைகள்*** | | | | |
| i. | முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இலக்கம் 33 இன் கீழ் பணியாட்தொகுதியினை ஆட்சேர்ப்புச் செய்வதற்காக பின்வரும் நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவா என்பதனைப் பரீட்சிக்கவும்.<br>• தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அடிப்படை மதிப்பீட்டினைப் பெற்றுக்கொள்ளல்.<br>• வெளிநாட்டு வளத் திணைக்களத்தின் ஆரம்ப அனுமதியினைப் பெற்றுக்கொள்ளல்.<br>• அமைச்சரவை அனுமதியினைப் பெற்றுக்கொள்ளல்.<br>• ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்வது தொடர்பாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதியினைப் பெற்றுக்கொள்ளல். | மு.சே.சு. 33 (1.1.1) | | | |
| ii. | கருத்திட்டமானது பின்வரும் வரையறைகளுக்கு ஏற்ப செயற்படுகின்றதா என்பதனை பரீட்சிக்கவும்.<br>• கருத்திட்டத்தின் காலம் இரண்டு வருடங்களை விடவும் அதிகமாகக் காணப்படல்.<br>• ஆகக் குறைந்தது செலவினத்தில் 50மூ வீதம் வெளிநாட்டு நிதி மூலங்களில் இருந்து நிதியிடப்படுகின்றமை.<br>• வெளிநாட்டு ஆலோசனை கட்டணமானது வெளிநாட்டு உதவிகளில் 20மூ இற்கு மேற்படாதிருத்தல்.<br>• மொத்த கருத்திட்ட செலவினம் 5 மில்லியன் அமெரிக்க டொலரை விடவும் குறையாது காணப்படல்.<br>• கருத்திட்டமானது உள்நாட்டு நிதியீட்டினை அடிப்படையாகக் கொண்ட போதிலும் கருத்திட்டத்தின் செலவினம் 5 மில்லியன் அமெரிக்க டொலரை விடவும் குறையாது காணப்படல். | மு.சே.சு. *33 (1.1.2)* | | | |
| 8. | ***பணியாட்டொகுதியின் தேவைகளை இனங்காணல்*** | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **i.** | கருத்திட்டத்தை செயற்படுத்துவதற்கு பொறுப்பான அமைச்சு∴ திணைக்களம் காணப்படும் பணியாட்டொகுதியினரின் வரையறையினுள் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான ஆற்றல் பற்றி தேடிப்பார்க்கப்பட்டுள்ளனவா என்பதனை பரீட்சிக்கவும். | மு.சே.சு. 33 (2.1.1) | | | |
| **ii.** | கருத்திட்ட செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக தனியான பணியாட்டொகுதியினரை ஆட்சேர்ப்புச் செய்ய வேண்டிய தேவை ஏற்படும் சந்தர்ப்பங்களில் கருத்திட்டத்தின் அடிப்படை அனுமதி பெறப்பட்டுள்ளதா என்பதனைப் பரீட்சிக்கவும். | மு.சே.சு. 33 (2.1.2) | | | |
| **iii.** | அப்பணியாட்தொகுதி வெளிநாட்டு வளங்கள், வரவு செலவுத் திட்ட முகாமைத்துவ சேவைகள், கொள்கை திட்டமிடல் மற்றும் அரச தொழில் முயற்சிகள் ஆகிய திணைக்களங்களின் தலைவர்களை உள்ளடக்கிய குழுவொன்றின் அனுமதியினைப் பெற்றுக் கொண்டுள்ளனவா என்பதனைப் பரீட்சிக்கவும். | மு.சே.சு. 33 (2.1.2) | | | |
| **iv.** | அனுமதிக்கப்பட்ட பதவியணி மற்றும் சம்பளக் கட்டமைப்பு என்பன செயற்திட்ட ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளனவா என்பதை உறுதி செய்து கொள்ளவும். | மு.சே.சு. 33 (2.1.2) | | | |
| **9.** | **திட்டப் பதவியணியை ஆட்சேர்ப்புச் செய்தல்** | | | | |
| **i** | அடிப்படை திட்ட பணியாட்தொகுதி பணி ஆரம்பிக்க வேண்டிய காலம் பற்றி செயற்திட்டத்தின் மதிப்பீட்டுக் கட்டத்தில் தீர்மானித்திருத்தல் வேண்டும். அந்த பணியாட்தொகுதி இனங்காணப்பட்டு ஆட்சேர்ப்புச் செய்தல் பற்றி பரீட்சிக்கவும். | மு.சே.சு. 33 (2.2.2) | | | |
| **ii** | அனுமதிக்கப்பட்ட செயற்திட்ட பணியாட்தொகுதிக்குத் தேவையான வரவு செலவுத் திட்ட ஏற்பாடுகளை தயாரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளனவா என்பதனைப் பரீட்சிக்கவும். | மு.சே.சு. 33 (2.2.3) | | | |
| **iii** | திறந்த விளம்பரம் ஒன்று மற்றும் விண்ணப்பப் படிவங்களைக் கோரியதன் பின்னர் நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம் சகல பதவிகளுக்கும் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளனவா என்பதனைப் பரீட்சிக்கவும். | மு.சே.சு. 33 (2.2.4) | | | |
| **iv.** | 30 மில்லியன் அமெரிக்க டொலருக்கு சமமான∴ கூடிய செயற்திட்டங்களுக்கு பணிப்பாளரை நியமிக்கும் பொறுப்பு திறைசேரியின் செயலாளர்∴ திறைசேரியின் பிரதிச் செயலாளர் ஆகியோர் தலைமை தாங்கும் குறித்த அமைச்சின் செயலாளர் அல்லது மாகாண சபையின் பிரதம செயலாளர், திறைசேரித் திணைக்களத் தலைவர் மற்றும் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்தம் நிறுவனத்தின் தலைவர்களை உள்ளடக்கிய நேர்முகப் பரீட்சைக் குழு ஒன்றின் ஊடாக மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதனைப் பரீட்சிக்கவும். | மு.சே.சு. 33 (2.2.5.அ) | | | |
| **v.** | 30 மில்லியன் அமெரிக்க டொலருக்குக் குறைந்த செயற்திட்டங்களுக்கு பணிப்பாளர்களை ஆட்சேர்ப்புச் செய்யும்போது அமைச்சின் செயலாளரது∴ மாகாண சபையின் பிரதம செயலாளரது தலைமையில் மற்றும் திறைசேரியின் திணைக்களத் தலைவர் ஒருவர் மற்றும் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் நிறுவனத்தின் தலைவரை உள்ளடக்கிய நேர்முகப் பரீட்சைக் குழுவொன்றின் ஊடாக மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதனைப் பரீட்சிக்கவும். | மு.சே.சு. 33 (2.2.5.ஆ) | | | |
| **vi.** | திட்டத்தின் ஏனைய சிரேஷ்ட அலுவலர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான நேர்முகப் பரீட்சைகள் குழு அமைச்சின் செயலாளர் ∴ மாகாண சபைகளின் பிரதம செயலாளர், திட்டப் பணிப்பாளர் மற்றும் அமுல்படுத்தும் நிறுவனத்தின் தலைவர் ஆகியோரை உள்ளடக்கி உள்ளதா என்பதனைப் பரீட்சித்துக் கொள்ளவும். | மு.சே.சு. 33 (2.2.5.இ) | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| vii. | ஏனைய உதவிப் பணியாட்டொகுதியினரின் ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள், திட்டப் பணிப்பாளர் தலைமை தாங்கும் குறித்த அமைச்சின்∴ மாகாண சபையின் மற்றும் நடைமுறைப்படுத்தும் நிறுவனத்தின் அங்கத்தவர்களைக்கொண்டு அமைக்கப்பட்டுள்ளதா என்பதனைப் பரீட்சித்துக் கொள்ளவும். | மு.சே.சு. 33 (2.2.5.ஈ) | | | |
| viii. | திட்ட பணியாட்தொகுதியின் ஒவ்வொரு அங்கத்தவரும் பொது நிருவாக சுற்றறிக்கை 33(1) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமையினைப் பூர்த்தி செய்துள்ளனரா என்பதனைப் பரீட்சிக்கவும். | மு.சே.சு. 33 (2.2.6) | | | |
| ix. | திட்டங்களின் பணிப்பாளர் மற்றும் சிரேஷ்ட பணியாட்டொகுதி என்பவற்றினை நியமிக்கும் அதிகாரம் பெற்றவராக செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் நிறுவனத்தின் தலைவரும் மற்றைய பணியாட்தொகுதியினரை நியமிக்கும் அதிகாரம் பெற்றவராக செயற்திட்டப் பணிப்பாளரும் செயற்பட்டுள்ளனரா என்பதனை உறுதி செய்துகொள்ளவும். | மு.சே.சு. 33 (2.2.7) | | | |
| x | அனைத்து நியமனங்களும் வருடாந்த செயலாற்றுகையின் மீது ஆகக் கூடியது 3 வருடங்களுக்கு வருடாந்த முன்னேற்ற அடிப்படையில் நீடிக்கக் கூடியவாறு ஒப்பந்த அடிப்படையில் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிசெய்து கொள்ளவும். | மு.சே.சு. 33 (9.1) | | | |
| xi | வருடாந்த வினைத்திறன் மதிப்பீட்டு அளவு பிரமாணத்தைத் தயாரிக்கும்போது நிதி வழங்குநர்களின் ஆலோசனைகள் பெறப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிசெய்து கொள்ளவும். | மு.சே.சு. 33 (2.2.8) | | | |
| xii | 57 வயதிற்கு மேற்பட்டோருக்குக் கருத்திட்டத்திலே நியமனம் வழங்கப்பட்டுள்ள போது அமைச்சரவையின் அனுமதி பெறப்பட்டுள்ளதா என்பதனைப் பரீட்சித்துக்கொள்ளவும். | மு.சே.சு. 33 (2.2.9 ரூ 3.1) | | | |
| **10.** | **அரசாங்க சேவை∴ மாகாண அரசாங்க சேவை, கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் மூலம் மேற்கொள்ளப்படும் நியமனங்கள்** | | | | |
| i. | மேற்படி சேவைகளிலிருந்து பின்வரும் பிரிவுகளின் கீழ் கருத்திட்டத்திற்கு ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்யும் போது பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் காணப்படும் இசைவுறும் தன்மைகள் பற்றிப் பரீட்சித்துப் பார்க்கவும்.<br>• அரசாங்க சேவையில் 5 வருட சேவைக் காலத்தை விட கூடாதவாறு முழு நேர அடிப்படையில் விடுவிக்கப்படும் ஒருவர் தற்போது வகிக்கும் பதவிக்கு மேலதிகமாக கருத்திட்டப் பதவிக்குரிய சம்பளத்தில் 50மு வீதத்துடன் இச்சுற்றறிக்கையின் 4.2.1 சம்பள எல்லையை விடவும் அதிகரிக்காத சம்பளம் ஒன்றினைப் பெறுவதற்கு உரிமை கொண்டுள்ளார்.<br>• பொது நிருவாகச் சுற்றறிக்கை 13∴99 இன் பிரகாரம் 5 வருடங்களுக்குக் கூடாதவாறு சம்பளமற்ற விடுமுறையின் மீது கருத்திட்ட பதவி ஒன்றிற்கு விடுவிக்க முடியும். அதற்குரிய சம்பளம் இச்சுற்றறிக்கையின் 4.2.1 இன் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.<br>• அரசாங்க ஊழியர் ஒருவரை பதில் கடமை அடிப்படையில்∴கடமை தழுவல் அடிப்படையின் மீது விடுவிக்க முடியும். அதன் போது பதில் கடமை புரியும் பதவிக்குரிய சம்பளத்தில் 1∴3 மேலதிகச் கொடுப்பனவு ஒன்றினைப் பெற்றுக்கொள்ள உரிமையுண்டு. அவ் ஊழியர் இவ்வாறான இரண்டு கருத்திட்டங்களில் மட்டுமே ஒரே காலப் பகுதியில் சேவையாற்ற முடியும். | மு.சே.சு. 33 (3.1.அ) 4.1.1<br><br>மு.சே.சு. 33 (3.1.ஆ) 4.1.2 | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ii. | கருத்திட்டத்தின் சகல பணியாட்தொகுதியினரும் வழங்கப்பட்டுள்ள சம்பள அளவுத் திட்டத்தினுள் முதல் படிமுறையில் அமர்த்ததல் வேண்டும். இது தொடர்பாக கடைபிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளின் சரியான தன்மை பற்றிப் பரீட்சித்துப் பார்க்கவும். | மு.சே.சு. 33 (4.2.1) | | | |
| iii. | கருத்திட்டப் பணியாட்தொகுதியின் வருடாந்த சம்பள ஏற்றத்தினை பதவிக்குரிய சம்பள திட்டத்தினுள் செயலாற்றுகையின் மீது பெற்றுக்கொடுத்தல் வேண்டும். செயலாற்றுகையை மதிப்பீடு செய்வதற்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள மூலப் பிரமாணங்களை இனங்கண்டு பின்பற்றியுள்ள நடவடிக்கைகளைப் பரீட்சிக்கவும். | மு.சே.சு. 33 (4.2.3) | | | |
| iv | அரசாங்க சேவைக்கு புறம்பாகப் பெற்றுக்கொண்ட துணைப் பணியாட்தொகுதிக்கான சம்பளம் அரசாங்க சேவையின் அதையொத்த பதவிகளுக்குரிய ஆரம்ப சம்பள படிமுறையிலிருந்து ஆரம்பிக்கப்படல் வேண்டும். அவ்வாறான பணியாட்தொகுதிக்கான சம்பளங்களின் சரியான தன்மைப் பற்றி பரீட்சித்துப் பார்க்கவும். | | | | |
| **11** | **வருமான வரி செலுத்துதல்** | | | | |
| i. | கருத்திட்டப் பணியாட்தொகுதியைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க இறைவரிகள் சட்டத்தின் 15 ஆவது அத்தியாயத்தின் 132 ஆம் பிரிவின் பிரகாரம் வருமான வரி செலுத்துவதற்கான கடப்பாடு உடையவராவார் என்பதனைப் பரீட்சித்துப் பார்க்கவும். | மு.சே.சு. 33 (4.2.5) | | | |
| **12.** | **விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியம் ∴ ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் என்பவற்றிற்கான பங்களிப்பு.** | | | | |
| i. | அரசாங்க சேவைக்குப் புறம்பாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட கருத்திட்டப் பணியாட்தொகுதி மற்றும் சம்பளமற்ற விடுமுறையின் மீது அரசாங்க சேவையிலிருந்து ஆட்சேர்ப்புச் செய்த உத்தியாகத்தர்கள் ஊழியர் சேமலாப நிதியம் ∴ நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் என்பவற்றிற்கு பங்களிப்புச் செய்துள்ளனரா என்பதனைப் பரீட்சித்துப் பார்க்கவும். | மு.சே.சு. 33 (4.3.1) | | | |
| ii. | முழு நேர அடிப்படையின் மீதும் ∴ பதில் கடமை அல்லது தழுவல் அடிப்படையின் மீது ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர்கள் தொடர்ச்சியாக விதவைகள் மற்றும் அநாதைகள் நிதியத்திற்குப் பங்களிப்புச் செய்கின்றனரா என்பதனைப் பரீட்சித்துப் பார்க்கவும். | மு.சே.சு. 33 (4.3.2) | | | |
| iii | முழுநேர அடிப்படையின் மீது அரசாங்க சேவையிலிருந்து ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களின் ஓய்வூதியப் பங்களிப்பாக சேவை வழங்குநர் தற்போதைய பதவிக்குரிய சம்பளத்தில் 25மூ தொகையினை ஓய்வூதியத் திணைக்களத்திற்கு செலுத்துகின்றாரா என்பதனைப் பரீட்சித்துப் பார்க்கவும். | மு.சே.சு. 33 (4.3.3) | | | |
| **13.** | **ஏனைய நன்மைகளும் பங்களிப்புக்களும்** | | | | |
| i. | கடன் மற்றும் முற்பணம் போன்ற அறவிடப்பட வேண்டிய ஏனைய பெறுகைகள் உரியவாறு அறவிடப்படுகின்றனவா என்பதனைப் பரீட்சித்துக் கொள்ளவும். | மு.சே.சு. 33 (4.3.4) | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ii | உதவி வழங்கும் வெளிநாட்டு நிறுவனம் ஒன்றைச் சேர்ந்த உத்தியோகத்தர் ஒருவருடன் சிரேஷ்ட கருத்திட்ட உத்தியோகத்தர் ஒருவர் வெளிக்கள பயணத்தில் ஈடுபடும்போது செலவிட்ட வதிவிட செலவினங்களை முழுமையாக மீள்நிரப்புவதற்காக நியமன அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரின் முன்அனுமதி பெறப்பட்டுள்ளதா என்பதனையும் ஏனைய பணியாட்தொகுதிக்கு செலுத்துகின்ற இணைந்த படிகள் அரசாங்க சேவைக்கு ஒத்ததாகக் காணப்படுகின்றனவா என்பதனை பரீட்சித்துப் பார்க்கவும். | மு.சே.சு. 33 (5.2) | | | |
| iii | கருத்திட்டப் பணிப்பாளரின் எரிபொருள் கொடுப்பனவு திணைக்களத் தலைவர் ஒருவரின் எரிபொருள் கொடுப்பனவிற்கு சமமானதாகக் காணப்படுவதுடன், மேலதிக எரிபொருள் தேவைக்காக கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குப் பொறுப்பான நிறுவனத் தலைவரின் அனுமதியினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். அதன் பிரகாரம் செயற்படுகின்றனரா என்பதனைப் பரீட்சித்துப் பார்க்கவும். | மு.சே.சு. 33 (5.4) | | | |
| iv | கருத்திட்டப் பணியாட்தொகுதியினர் தமது முன்னைய தொழில் நிலையங்களில் அனுபவித்து வந்த விடுமுறை நன்மைகள்‧. மருத்துவ நன்மைகள்‧. பணிக்கொடை அல்லது வேறு அவ்வாறான ஊக்குவிப்புக்களைப் பெற்றுக்கொள்வதற்கு உரிமை இல்லை. அதன் பிரகாரம் செயற்படுகின்றனரா என்பதனை உறுதி செய்யவும். | மு.சே.சு. 33 (5.4) | | | |
| v | பகுதி நேர அடிப்படையில் அல்லது பதில் கடமை அடிப்படையில் உள்ள பணியாட்கள் தவிர்ந்த ஏனைய கருத்திட்டப் பணியாட்தொகுதியினர் பெறுகின்ற விடுமுறைகள் சாப்பு மற்றும் அலுவலக சட்டத்திற்கு ஏற்ப இடம்பெறுகின்றனவா என்பனைப் பரீட்சித்துப் பார்க்கவும். | மு.சே.சு. 33 (6.1) | | | |
| vi | கருத்திட்டப் பணிப்பாளரின் சிபாரிசின் கீழ் வெளிநாட்டு நிதியங்களை அடிப்படையாகக் கொண்ட கருத்திட்டங்களின் பணியாட்தொகுதியினர் ஒரு குறுங்கால பயிற்சிப் பாடநெறி ஒன்றில் கலந்து கொள்வதற்கான அனுமதி உள்ளதுடன், அதற்கான ஏற்பாடுகள் காணப்படுதல் வேண்டும். அதன் பிரகாரம் செயற்பட்டுள்ளனரா என்பதனைப் பரீட்சித்துப் பார்க்கவும். | மு.சே.சு. 33 (11.1) | | | |
| vii | கருத்திட்ட தொழிற்பாட்டுக் குழு அங்கத்தவர்களுக்கு கூட்டங்களுக்காக வழங்கப்படும் கொடுப்பனவுகள் முகாமைத்துவச் சுற்றறிக்கை 33 இன் பிரகாரம் இடம்பெறுகின்றனவா என்பதனைப் பரீட்சித்துப் பார்க்கவும். | மு.சே.சு. 33 (11.1 மற்றும் 11.2) | | | |
| viii | யாதேனுமொரு காரணத்தினால் கருத்திட்டம் தாமதமாகும் பட்சத்தில் அல்லது செலவினம் அதிகரிக்குமாயின் அதுபற்றி குறித்த அமைச்சின் செயலாளரினால் எழுத்து மூலம் நிதி அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதா என்பது பற்றியும் அது கருத்திட்டப் பணிப்பாளரின் கட்டுப்பாட்டிற்குப் புறம்பான காரணத்தினாலன்றி வேறு யாதேனுமொரு காரணத்தினால் ஏற்பட்டிருப்பின் அவரிடமும், அவரின் பணியாட்தொகுதியினரிடமும் அறவிடுவதற்கு ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளனவா என்பதனையும் உறுதி செய்து கொள்ளவும். | | | | |

## 3. கருத்திட்ட செயலாற்றுகை

| தொடர் இல | விபரம் | விசாரணைகள் | அவதானிப்பு | அவதானிப்புக்கள் பற்றிய விளக்கமளித்தல் | மதிப்பீடு |
|---|---|---|---|---|---|
| **14.** | ***கருத்திட்டக் கண்காணிப்பு மற்றும் முன்னேற்றம்*** | | | | |
| **i.** | கருத்திட்டக் கண்காணிப்பு மற்றும் முன்னேற்றம் பற்றி விசாரணைகளை மேற்கொள்ளும் முறைமை ஒன்றினை கருத்திட்ட முகாமையினால் நிறுவுதல் வேண்டும். அதன் பிரகாரம் அறிமுகம் செய்துள்ள முறைமைகள் பற்றி இனங்காணவும். | சம்பந்தப்பட்ட வெளிநாட்டுதவி ஒப்பந்தம் மற்றும்.:.அல்லது கருத்திட்ட முன்மொழிவு<br><br>வழங்கியுள்ள ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்கள் | | | |
| **ii.** | முன்னேற்றத்தை மதிப்பீடு செய்வது பற்றிய மிகவும் நெருங்கிய பொறுப்பு கருத்திட்ட முகாமைத்துவம்.:. தொழிற்பாட்டு அலகுகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. நடைமுறையிலுள்ள மதிப்பீட்டு முறைமையின் போதியத் தன்மை மற்றும் வினைத்திறன் என்பவற்றினை பரீட்சித்து குறைபாடுகள் இருப்பின் அதுபற்றி அறிவிக்கவும். அவ்வாறே கருத்திட்ட முகாமைத்துவத்தினுள் இடம்பெற வேண்டிய அதிகாரிப்பு ரீதியான தேவைகள் பற்றி குறிப்பிடவும். | | | | |
| **iii.** | கருத்திட்டக் கண்காணிப்பிற்காக கருத்திட்டத்திற்குப் பொறுப்பான அமைச்சு.:. கருத்திட்டத் தொழிற்பாட்டு நிறுவனம் என்பவற்றினால் பணி குறிகாட்டிகளை நிறுவுதல் வேண்டும். அதற்கேற்ப உண்மை செயாலாற்றுகை பற்றி பரீட்சித்து பின்னடைவுகள் இருப்பின் அறிவிக்கவும். | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **iv.** | அந்தந்த நிறுவனங்களினால் தயாரிக்கப்படும் முன்னேற்ற அறிக்கைகள் ஒப்பந்தத்தில் காட்டப்பட்டுள்ள∴ இருக்க வேண்டிய மூலப் பிரமாணங்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதி செய்து கொள்ளவும். | | | | |
| **v.** | கருத்திட்ட நிறைவு∴ நிறைவுகள் குறித்த ஏற்றுக்கொள்ளப்பட்ட தரத்திற்கு அமைவாக இருத்தல் வேண்டும். அதற்கேற்ப கருத்திட்டம் பூர்த்தியடைந்துள்ளதா என்பதனை உறுதி செய்து கொள்ளவும். | | | | |
| **vi.** | ஆலோசனை பணியில் ஈடுபட்டுள்ள உள்ளூர்∴ வெளிநாட்டு ஆலோசகர்கள் கருத்திட்ட ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு ஏற்ப ஆலோசனைப் பணியில் ஈடுபடுகின்றனரா என்பதனை உறுதிசெய்து கொள்ளவும். | | | | |
| **vii.** | கருத்திட்ட வட்டத்தின் பல்வேறு கட்டங்களில் கருத்திட்ட மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதனை பரீட்சித்துப் பார்க்கவும். | | | | |
| **viii.** | கருத்திட்டத் தொழிற்பாட்டுக் குழுவானது கருத்திட்டத்தின் முன்னேற்றத்தை மதிப்பீடு செய்தல் மற்றும் மீளாய்வு செய்தல் என்பவற்றிற்காக முறைப்படி ஒன்றுகூடுகின்றனரா என்பதனை பரீட்சிக்கவும். | | | | |
| **ix.** | ஆரம்ப செலவின மதிப்பீட்டிலிருந்து உண்மையான செலவினம் விலகுமாயின் அதற்கான காரணங்கள் மற்றும் பின்னணியை இனங்காணவும். | | | | |
| **x.** | வழங்கப்பட்ட கால எல்லையினுள் கருத்திட்ட தொழிற்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு முடியாது போகுமென அவதானிக்கும் சந்தர்ப்பத்தில் அதற்கான பின்னணி மற்றும் அதற்கான காரணம் என்பவற்றினை இனங்காணவும். | | | | |
| **xi.** | கருத்திட்டத்தின் மூல தொழிற்பாட்டுத் திட்டத்தில் யாதேனும் திருத்தங்களை மேற்கொள்வதாயின் அதன் பின்னணி மற்றும் அதில் தாக்கம் செலுத்தும் காரணிகள் என்பவற்றினை இனங்காணவும். | | | | |
| **xii.** | கருத்திட்டத்தின் மூல தொழிற்பாட்டுத் திட்டத்தில் அல்லது செலவின மதிப்பீட்டில் மேற்கொள்ளும் யாதேனும் திருத்தங்கள் கருத்திட்ட ஒப்பந்தத்திற்கு மற்றும்∴ அல்லது கருத்திட்டத் தொழிற்பாட்டுக் குழுவின் வழிகாட்டல்களுக்கு ஏற்ப இடம்பெறுகின்றனவா என்பதனை உறுதி செய்து கொள்ளவும். | | | | |
| **xiii.** | கருத்திட்ட தொழிற்பாடுகளின் இயக்கத்திற்கு தடையாக அமைகின்ற நிதிப் பாய்ச்சலில் யாதேனும் தாமதங்களை அவதானிக்கும் பட்சத்தில் அதன் பின்னணி மற்றும் அதில் தாக்கம் செலுத்தும் காரணிகள் என்பவற்றினை இனங்காணவும். | | | | |
| **15.** | ***முகாமைத்துவப் பொறுப்புக் கூறல்*** | | | | |
| **i.** | கருத்திட்ட தொழிற்பாட்டு நடவடிக்கைகளுடன் தொடர்புடைய ஒவ்வொரு நிறுவனத்தினதும் கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் என்பவற்றினை கருத்திட்டத்தின் ஆரம்ப கட்டத்திலேயே தீர்மானித்தல் வேண்டும். அவ்வாறு செய்யப்பட்டுள்ளனவா என்பதனையும் அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படுகின்றனவா என்பதனையும் உறுதி செய்யவும். | | | | |
| **ii.** | கருத்திட்ட தொழிற்பாட்டு நடவடிக்கைகளின் போது ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பாக அல்லது அவதானம் செலுத்தப்பட வேண்டிய கருத்திட்ட தொழிற்பாட்டுக் குழு உரிய அவதானம் செலுத்திலுள்ளதா என்பதனை பரீட்சிக்கவும். | | | | |
| **iii.** | கருத்திட்ட தொழிற்பாட்டுக் குழுவினால் செய்யப்பட்டுள்ள சிபாரிசுகளை நடைமுறைப்படுத்துவதற்கு கருத்திட்ட முகாமைத்துவ அலகு∴ அலகுகள் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளின் வெற்றித் தன்மை மற்றும் வினைத்திறன் என்பவற்றினை பரீட்சிக்கவும். | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ***16*** | ***கருத்திட்ட வழங்கல்*** | | | | |
| **i.** | கருத்திட்ட வழங்கலுக்காக அனுமதிக்கப்பட்ட வழங்கல் திட்டமொன்று உள்ளதா என்பது பற்றியும் மற்றும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதி செய்து கொள்ளவும். | | | | |
| **ii.** | கருத்திட்டத்திற்கு அறிமுகம் செய்துள்ள வழங்கல் முறைமையை இனங்கண்டு அதனுடன் தொடர்புடைய வழங்கல் வழிகாட்டல்கள் உரிய முறையில் பின்பற்றப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிசெய்து கொள்ளவும். | | | | |
| **17.** | ***கருத்திட்டத்தின் வெற்றித் தன்மை*** | | | | |
| **i.** | கருத்திட்டத்தின் வெற்றித் தன்மையினை உறுதி செய்வதற்கு அறிமுகம் செய்துள்ள முறைமையினை இனங்கண்டு அதன் போதியத் தன்மை மற்றும் வினைத்திறன் என்பவற்றினை உறுதிசெய்து கொள்ளவும். | | | | |